# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2018

பதினொன்றாம் வகுப்பு    பதிவு எண் |  |  |  |  |  |  |

நேரம்: 2.30 மணி    **PART - III - வணிகவியல்**    மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:**
1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பிரிவு - I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20×1=20**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) வியாபாரம் மற்றும் வணிகம் ................ பேரரசில் பொதுவானவையாக இருந்தது.
அ) பல்லவன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) சேரர்

2) இடத்தடையை இதன் மூலம் நீக்கப்படுகிறது.
அ) போக்குவரத்து ஆ) பண்டகச்சாலை இ) விற்பனையாளர் ஈ) காப்பீடு

3) மருத்துவர் தொழில் என்பது
அ) வேலைவாய்ப்பு ஆ) தொழில் இ) சிறப்புத்தொழில் ஈ) தனியார் வணிகம்

4) தொழிலின் முதன்மைக் குறிக்கோள்
அ) இலாபம் ஈட்டுதல் ஆ) இலாப மீட்டாதிருத்தல்
இ) சிறப்புத் தேர்ச்சி ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

5) அதிக அளவு அபாயத்தைக் கொண்டது
அ) உற்பத்தித் தொழில் ஆ) வணிகம் இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்

6) வியாபாரத்திற்கு உறுதுணை புரிபவை என்பது
அ) வியாபாரம் ஆ) விளம்பரம் இ) பண்டகசாலை ஈ) கட்டுமானம்

7) கீழ்க்கண்டவாறு எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?
அ) தனியாள் வணிகம் ஆ) கூட்டாண்மை இ) கூட்டுறவு சங்கம் ஈ) நிறுமம்

8) இந்து கூட்டுக்குடும்ப தொழில் உறுப்பினர்களை எவ்வாறு அழைப்பாய்?
அ) கர்த்தா ஆ) கூட்டு வாரிசுதாரர் இ) தலைமுறை ஈ) கூட்டாளிகள்

9) கூட்டாண்மைப் பதிவு
அ) கட்டாயம் ஆ) விருப்பத்தின் பேரில்
இ) அவசியமில்லை ஈ) இவற்றில் எதுவுமில்லை

10) நிறுமத்தின் இயக்குநரை கீழ்க்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?
அ) கடனீந்தோர் ஆ) கடனாளர் இ) கடனீட்டு பத்திரதாரர் ஈ) பங்குதாரர்கள்

11) நுகர்வோர் கூட்டுறவு முதன் முதலாக வெற்றி பெற்றது
அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) சுவிஸ் ஈ) இந்தியா

12) கூட்டுறவு தோல்வியடைவதற்கான காரணம்
அ) வரம்பற்ற உறுப்பினர் ஆ) ரொக்க வியாபாரம்
இ) தவறான நிர்வாகம் ஈ) இழப்பு ஏற்படுவதால்

13) யூனியன் கார்பைடு நிறுவனத்தை எதற்கு உதாரணமாக கூறலாம்?
அ) பன்னாட்டு நிறுமம் ஆ) அரசு நிறுமம் இ) இணை நிறுமம் ஈ) பொதுத்துறை நிறுமம்

14) இந்திய எஃகு ஆணையால் தலைமையகம் உள்ள இடம்
அ) சென்னை ஆ) மும்பை இ) புதுடெல்லி ஈ) கொல்கத்தா

15) பாரத ஸ்டேட் வங்கி என்பது
அ) பி.என்.பி ஆ) எஸ்.பி.ஐ. இ) ஐ.சி.ஐ.சி.ஐ ஈ) ஆர்.பி.ஐ

16) இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1ம் ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.
அ) 1936 ஆ) 1935 இ) 1933 ஈ) 1934

17) RTGS மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய உதவும்?
அ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும் ஆ) 50,000
இ) 2 லட்சம ஈ) 5 லட்சம்

18) மத்திய பண்டக காப்பக கழகம் ............... ஆண்டு நிறுவப்பட்டது.
அ) 1952 ஆ) 1957 இ) 1959 ஈ) 1932

19) மிக வேகமான போக்குவரத்துக்கான வழி என்ன?
அ) தொடர் வண்டி ஆ) சாலை இ) இடம் ஈ) விமானம்

20) காப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடு ............... ஆகும்.
அ) மிக்க நம்பிக்கை ஆ) கூட்டுறவு இ) பகர உரிமை ஈ) அண்மைக் காரணம்

**பிரிவு - II**

**எவைபேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.**
**வினா எண் 21க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** **7×2=14**

21) வெளிநாட்டு வங்கிகள் என்றால் என்ன?
22) நாளங்காடி என்றால் என்ன?
23) இந்து சட்டத்தின் 2 பிரிவுகள் யாவை?
24) பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?
25) கூட்டுறவு சங்கத்திற்கு 2 உதாரணம் என்ன?
26) பன்னாட்டு நிறுமம் இலக்கணம் தருக.
27) மையவங்கி பற்றி சுருக்கமாக விளக்குக.
28) தானியங்கி பணம் வழங்கும் அட்டை பறறி நீவிர் அறிவது யாது?
29) மருத்துவக் காப்பீடு என்றால் என்ன?
30) மின்னணு வணிகம் பற்றி நீவிர் அறிவது யாது?

**பிரிவு - III**

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 31-ற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **7×3=21**

31) இந்து கூட்டுக்குடும்பத் தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றை விவரி.
32) பண்டைய தமிழ்நாட்டின் வர்த்தக வளர்ச்சியில் சங்க காலத்தின் பங்கு என்ன?
33) தனியாள் வணிகத்தின் 3 பண்புகளை விவரி.
34) கூட்டுறவின் குறைபாடுகளை விவரி. எவையேனும் மூன்று?
35) இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?
36) தேசிய மின்னனு நிதி பரிமாற்றம் விளக்குக.
37) பண்டக காப்பாளர் ரசீது. பண்டக சான்றாணை வேறுபடுத்துக.
38) IRDAI என்பது என்ன?
39) தனி உரிமையியல் இரண்டு நன்மைகளைக் கூறுக.
40) வணிகத்தின் ஏதேனும் 3 சிறப்பியல்புகளை விவரி.

**பிரிவு - IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **7×5=35**

41) வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக. **(அல்லது)**
தொழிலின் ஏதேனும் 5 நோக்கங்களை விவரிக்கவும்.

42) தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரிக்கவும். **(அல்லது)**
கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரிக்கவும்.

43) பன்னாட்டு நிறுவனம், அதன் சிறப்பியல்புகளை விவரிக்கவும். **(அல்லது)**
கூட்டுறவு சங்கத்தின் வகைகளைக் கூறு. ஏதேனும் 5.

44) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை வகைப்படுத்துக. **(அல்லது)**
வணிக வங்கிகளின் இரண்டாம் நிலை செயல்பாடுகளை விளக்குக.

45) இந்தியாவில் உள்ள பண்டக காப்பகங்களை விளக்குக. **(அல்லது)**
போக்குவரத்து நன்மைகளை விவரிக்கவும்.

46) காப்பீட்டின் கோட்பாடுகளை விவரிக்கவும். **(அல்லது)**
தொழிலின் சமூக பொறுப்புணர்வின் மூலம் நன்மை பெறும் குழுக்களை விவரிக்கவும்.

47) பொருளாதார செயல்பாடுகளுக்கும் மற்றும் பொருளாதாரம் சார்ந்த செயல்பாடுகளுக்கும் உள்ள வேறுபாடுகளை விவரிக்கவும். **(அல்லது)**
உற்பத்தி, தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் ஓர் ஒப்பீடு செய்க.

***- --***